# பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்

CIN : L29130TN1961PLC004466

(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)

ஹுசூர் கார்டன்ஸ், செம்பியம், சென்னை - 600 011.
இணையம் : www.bimite.co.in மின்னஞ்சல் : vidhyashankar@bimite.co.in

## அறிவிப்பு

**ஜூலை 22, 2016 வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு** நிறுவனப் பங்குதாரர்களின் **55ஆம் ஆண்டு பொதுக்கூட்டமானது நியூ உட்லண்ட்ஸ் ஓட்டல், 72/75, டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004ல்** நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

இந்த கூட்டம் நடத்தப்படுவதையொட்டி 2015 – 2016ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை உறுப்பினர்களுக்கு பதிவு அஞ்சலில் ஜூன் 27, 2016 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. வாக்கு விண்ணப்பம், சுய முகவரியிட்ட உறையுடன் அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அறிவிப்பின் முழு விபரம், கணக்கு அறிக்கை, லாப நஷ்டக் கணக்கு அறிக்கை, தணிக்கையாளர்களின் அறிக்கை, இயக்குனர்களின் அறிக்கை (தனியாகவும் மற்றும் தொகுக்கப்பட்டதாகவும்) மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கைகள் ஆகியவை நிறுவனத்தின் இணையதளமான **www.bimite.co.in** வெளியிடப்பட்டுள்ளது.

இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் அலுவல் நேரத்தில், 55வது ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு முன்பாக உறுப்பினர்கள் பார்வையிடுவதற்காக வைக்கப்படும்.

நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 91இன் படி உறுப்பினர்களின் பதிவேடு, பங்கு மாற்ற பதிவேடுகள் ஆகியவை **ஜூலை 19, 2016 முதல் ஜூலை 22, 2016** வரை (இரண்டு நாட்களும் உள்ளடக்கி) மூடி வைக்கப்பட்டிருக்கும் என அறிவிக்கப்படுகிறது.

நிறுவனச் சட்டம் 2013, பிரிவு 108இல் கண்டுள்ளபடியும் அவ்விடத்திற்கு உரித்தான விதிகளுடன் மற்றும் செபியின் 44வது நிபந்தனைபடி நிறுவனமானது தொலைதூர மின் வாக்கு செலுத்தும் முறையை 55ஆம் ஆண்டு பொதுக்கூட்ட அறிவிப்பில் உள்ள வர்த்தக பரிவர்த்தனைகளை மின்னணு மூலம் வாக்களிக்கும் வசதியை நேஷனல் டெபாசிடரி சர்வீஸஸ் லிமிடெடில் (NSDL) செய்யப்பட்டுள்ளது. இந்த மின்னணு வாக்கு அளிக்கும் முறையானது **ஜூலை 19, 2016 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி ஜூலை 21, 2016 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு நிறைவடையும். மேற்குறிப்பிட்ட தேதிகளுக்குப் பின் எந்தவொரு தொலைதூர மின் வாக்கு அளிக்கவும் அனுமதி வழங்கப்படமாட்டாது. இதற்கான கடைசி நாள் ஜூலை 15, 2016.**

நிறுவனமானது தன்னுடைய உறுப்பினர் வாக்கினை நேரடியாக பதிவு செய்யவும், அதற்குத் தேவையான வழிமுறைகளை சுற்றறிக்கையாகவும் அனுப்பியுள்ளது. இவ்வாறு முறையாக பதிவு பூர்த்தி செய்யப்பட்ட வாக்குகள் அதனை ஆய்வு செய்பவரிடம் ஜூலை 21, 2016 வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு அலுவல் நேரம் முடிவடையும் முன்பாக கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

திரு. C.V. மதுசூதனன், பார்ட்னர், KSR கம்பெனி, நிறுவனச் செயலர் LLP இந்த வாக்குமுறையை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்.

நேரடி வாக்கு மற்றும் தொலைதூர மின்னணு வாக்கு தொடர்பான கேள்விகள் / குறைகள் ஆகியவற்றிற்கான தீர்வுகளுக்கு **திரு. கே. வித்யாசங்கர், நிறுவனச் செயலர் / இணக்க அலுவலருக்கு** மேற்குறிப்பிட்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். (தொலைபேசி எண். 0422 – 2221 159 / 97902 46890) மேலும் விபரங்களுக்கு பங்கு தாரர்களின் மின்வாக்கு குறித்த விபரங்களை பயனாளர் புத்தகத்தை **www.evoting.nsdl** என்ற இணைய முகவரியில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

நிர்வாக உத்தரவுப்படி
கே. வித்யாசங்கர்
நிர்வாகச் செயலர்

சென்னை
ஜூன் 29, 2016